'இசை நிலா' வித்யா

# 'ஆன்லைன்' குரு!





தன் குடும்பத்தினரோடு செலவழிக்கும் நேரத்தைவிட, 'ராக தேவதை'களோடு அதிக நேரம் இருக்கிறார் பாடகி வித்யா சுப்ரமணியன். சென்னை தி.நகரில் உள்ள அவரது வீட்டில் 'ஆபேரி'யும், 'சாவேரி' யும் மழை நேரத்து காவிரி போல் கரை புரண்டு ஓடுகிறது.

"நல்ல இசையை அனுபவிச்சவர்களுக்குத்தான் அதன் அருமை புரியும்!" என்று காதுகளில் இருந்து 'ஹெட் ஃபோனை' எடுத்தவாறே நம் எதிரே அமர்ந்தார். பெங்களூரில் இருக்கும் மாணவிக்கு 'ஆன்லைன்' மூலம் அப்போதுதான் பாட்டு கற்றுத் தந்துவிட்டு வந்தார். சற்று நேரத்தில் இன்னொரு ஊர் மாணவி இவருக்காக 'கம்ப்யூட்டர்' திரை முன் காத்திருப்பார்.

அண்மையில் தமிழக அரசின் 'கலைமாமணி' விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள வித்யா, வேகமாக வளர்ந்து வரும் துடிப்பான பாடகி. அத்தோடு இவரது பெயரில் இயங்கும் 'வித்யா சுப்பிரமணியன் அகடமி'யில் சுமார் 750 பேர் 'ஆன்லைன்' மூலம் இசை கற்கின்றனர்.

இவருக்கு உதவுவதற்காகவே ஆசிரியைகள் குழுவே இயங்குகிறது. அவர்கள் 'ஆன்லைன்' தொடர்பிலேயே எல்லா வேலைகளையும் கவனிக்கின்றனர். இவை ஒரு புறமிருக்க, சென்னை 'சபா'க்கள் உள்பட தமிழகம் எங்கும் நிறைய கர்நாடக சங்கீத கச்சேரிகள் செய்கிறார். பாட்டோடு படிப்பதிலும் கெட்டிக்கார பெண் என்பது அவரிடம் பேசப் பேசப் புரிந்தது!





“என் தந்தை எஸ்ஸார் கணபதி பாலக்காடு. அம்மா ஸ்வர்ணலதா திட்டக்குடி. இருவர் குடும்பத்திலும் இசை ஐக்கியம் உண்டு. அம்மாவும் சரி... எங்கள் பாட்டியும் சரி... வாய்ப்பாட்டு, வீணை இரண்டிலும் தேர்ந்தவர்கள். கச்சேரிகளும் செய்துள்ளனர்.

நாங்கள் பல வருஷங்களுக்கு முன்பே சென்னையில் குடியேறிவிட்டோம். என்னோட ஒரே தம்பி சிவகுமார், அமெரிக்காவில் கலிஃபோர்னியாவில் என்ஜினீயரா இருக்கான். என் கணவர் சுப்பிரமணியன், ‘ரிசர்ச் சயின்டிஸ்ட்’.

சங்கீதம் என்பது எனக்கு மூணு வயசில் பரிட்சயமானது. அப்போது எங்கள் பாட்டி வீடு, சென்னை மயிலாப்பூரில் இருந்தது. அந்தக் காலத்தில் அடிக்கடி அங்கு போவேன். அவரோட பக்கத்து வீட்டில் ருக்மணி ராஜகோபாலன் என்ற பாட்டு ‘டீச்சர்’ இருந்தார். ஆக... என் முதல் இசைக் குரு அவர்தான்! பன்னிரெண்டு வயதில் ‘வயலின் மேஸ்ட்ரோ’ லால்குடி ஜெயராமன் வீட்டுக்குப் போனது மறக்க முடியாது.

என் அதிர்ஷ்டம்... முதல் சந்திப்பிலேயே தன் சிஷ்யையாக ஏற்றுக்கொண்டார். அவரிடம் கற்றது கனாக் காலம். அப்புறம் ‘சி.ஏ.’ படிப்பை முடிக்கிற வரை அவரிடம் கற்றேன்” என்றபோது சூடான ‘பில்டர்’ காப்பி நுரை ததும்ப வந்தது.

படிப்பிலும், பாட்டிலும் தொடர்ந்து கவனம் செலுத்தி இருக்கிறார் இவர். இந்த இரண்டிலும் ஒன்றுக்காக ஒன்றை இழந்துவிடக் கூடாது என்பதில் தெளிவோடு இருந்துள்ளார்.

“எங்கள் கல்யாணத்தின்போது கணவர், கலிஃபோர்னியாவில் வேலை செய்தார். அப்புறம் நியுயார்க் போனோம். 2004-ம் வருடம் முதல் மகன் ஸ்கந்தன் பிறந்தான். அந்த நேரத்தில் குழந்தையைப் பார்த்துக்கொண்டு, நிறைய பேர்களுக்கு ‘ஆன்லைன்’ மூலம் இசை சொல்லித் தந்தேன். நல்ல வரவேற்பு கிடைத்தது. நல்ல குருவுக்காக பலர் காத்திருப்பது புரிந்தது.

2008-ல் என் மகள் பார்வதி பிறந்து, அடுத்த இரண்டு வருடத்தில் சென்னை வந்துவிட்டேன். ‘ஆன்லைன் டீச்சிங்’ அளிப்பதற்கு தொடர்ந்து வரவேற்பு கிடைத்தது. ‘இன்டர்நெட்’ என்பது எவ்வளவு பெரிய சக்தி வாய்ந்தது என்பதைப் புரிந்துகொண்டேன்.

இப்போது ‘அகடமி’ ஆரம்பித்துள்ளேன். இந்த ‘டெக்னிக்’கை சரியாக பயன்படுத்தினால் கற்க இதுவும் சிறந்த வழி. வாத்தியாரிடம் அமர்ந்து நேரில் கற்றால்தான் இசை வரும் என்பதெல்லாம் புரியாமல் பேசுவது...” என்று ஆணித்தரமாக சொல்கிறார் வித்யா.

இவரது ‘அகடமி’யில் ஐந்து வயது குழந்தைகளில் இருந்து 75 வயது பெரியவர்கள் வரை கற்கிறார்களாம். இந்திய நகரங்களில் இருந்து மட்டுமல்லாமல்... வெளிநாட்டவர்களும் அதிக ஆர்வமாக உள்ளார்கள். சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்தில் இருந்தும், ஐரோப்பா, அமெரிக்கா நாட்டவர்களும் உண்டு. வெள்ளைக்காரர்களும் உள்ளனராம்.



அமெரிக்காவில் இருந்தபோது நியூயார்க் மாநிலத்தின் கலாச்சாரத்துறை அளிக்கும் விருதை பெற்றிருக்கிறார் வித்யா. சென்னை கிருஷ்ண கான சபாவின் ‘தஞ்சாவூர்



கல்யாணராமன் எண்டோவ்மெண்ட்' விருது, சென்னை 'ஐ.ஐ.டி.'யில் நடந்த சர்வதேச தொழிலதிபர்கள் மாநாட்டில் 'எஃப்.ஐ.சி.சி.ஐ.' அமைப்பின் 'முன்னுதாரணமான பெண்மணி' பட்டம், 'ஆன்லைன்' பயிற்சிக்கான 'சுயசக்தி' விருது உள்பட பல பெருமைகளுக்குச் சொந்தக்காரர் வித்யா.

இப்படி பல சாதனைகளை இளம் வயதிலியே பெற்றுவிட்ட இவருக்கு வாழ்வில் மறக்க முடியாத தருணங்கள் பல உண்டு. "சென்னை பிரம்ம கான சபாவில் என் கச்சேரிக்கு வந்திருந்தார் 'சங்கீத மேதை' பாலமுரளி கிருஷ்ணா. அவரது திடீர் வருகையை நான் எதிர்பார்க்கவில்லை. எனக்குள் சற்று படபடப்பு. அதே வேளை அவரை தலையாட்டி ரசிக்க வைக்கணும் என்ற வேகம். அன்னிக்கு 'தன்யாசி ராக'த்தில் பாடினேன். கச்சேரி அப்படி அம்சமாக அமைந்தது.

கச்சேரி முடிச்சவுடன், அவரிடம் ஆசிர்வாதம் வாங்கப் போனேன். 'பிரமாதமா பாடினேம்மா...' என்று வாய் நிறைய சொன்னார். தேர்தல்ல ஜெயிச்ச வேட்பாளரை அறிவிக்கிறபோது ஏற்படுற சந்தோஷம் எனக்கு..." என்று வித்யா இமைகள் படபடக்க பூரித்தார். ஒரு முறை இவரது 'ஆன்லைன் டீச்சிங்' பற்றி கேள்விப்பட்டு 'பி.பி.சி.' நேர்காணல் செய்ததை மகிழ்ச்சியுடன் சொன்னார்.

"எனது இசை வாழ்வில் எவ்வளவோ திருப்தியான தருணங்கள் இருந்தாலும், 'ஆட்டிஸம்' குழந்தைகள், மன நிலை பாதிக்கப்பட்ட சிறுமிகள், பார்வையற்றவர்கள் போன்றவர்களுக்கு 'ஆன்லைன்' மூலம் சங்கீதத்தைச் சொல்லி தந்து, அவர்களும் ஸ்ருதி லயத்தை பிடித்துக்கொண்டு பாடுகிறபோது, அதில் கிடைக்கிற பரவசமே வேற! இந்த வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் உள்ளது என நெகிழ்ந்து போவேன். என் கணவரும் இதை மிகவும் விரும்புவார்" என்று சொல்லும்போதே வித்யாவின் விழிகளில் லேசாக ஈரம்.

இசையும், மனநேயமும் இணைந்த மென்மை மனம் வாழ்க!

– சந்திப்பு: **வி.சந்திரசேகரன்**

## மூளைக்கு வேலை – 981

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 |
| 3 | 4 | | 5 | | |
| 6 | | 7 | | 8 | ■ |
| | 9 | | | | |
| | | 10 | | | |
| 11 | | | 12 | | 13 |

**இடமிருந்து வலம்:**

1. ஓவியம் (5).
2. அன்பு (3).
5. பரிகாசம்.
6. கருமி (4).
9. கிரகங்களின் பயணம்.
10. முதல் பால்.
11. இத்தாலி தலைநகர் (2).
12. ஓர் இனிப்பு.

**மேலிருந்து கீழ்:**

1. நட்பு (4).
2. ஒரு மாதம் (2).
4. மனதில் வரும்.
7. அரிய மூலிகை.
8. நோய், திரும்பி உள்ளது.
10. ஒழுக்கமானவன், எதிர் திசையில் உள்ளான்.
13. பல உயிரினங்குகளுக்கு இருப்பது, திசை மாறி நிற்கிறது (2).

### விடை : 980

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ 1 | த 2 | ர | ம் | தூ 3 | ளி |
| ர 4 | ங் | கோ 5 | லி | ப | க 6 |
| ண் | க 7 | ணி | த | ம் | ரு |
| கு 8 | ம் | மா | ள | ம் | வூ |
| தி | ம் | க 9 | ங் | வ | ல 10 |
| ர் | வா 11 | னி | லை | ■ | ம் |